சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.67/2022**

வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. K. ரெஜினா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. விஜய் | த/பெ: மாணிக்கவாசகம் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 07.11.2025 | |

முதல் விசாரணை...

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 ஆம் சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

ஏற்கனவே பாண்டியன் கிராம வங்கியாக இருந்தது தற்போது தமிழ்நாடு கிராம வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாண்டியன் கிராம வங்கி 12.01.2018 முதல் 31.03.2018 பாண்டியன் கிராம வங்கியாக இருந்து வந்தது. 01.04.2019 முதல் தமிழ்நாடு கிராம வங்கியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வங்கி இணைக்கப்பட்டது சம்பந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் 12.01.2018 முதல் 01.10.2021 வரை மேலாளராக பணியிலிருந்ததை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியிடமிருந்து கடன் நிலுவை தொகை குறித்து எந்த வகையில் தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. நான் சொல்வது போல் கடன்நிலுவை தொகை குறித்து பிரதிவாதிகளுக்கு எந்த வகையிலும் தகவல் கொடுக்கவில்லை என்றாலும் உண்மையில் கொடுத்திருந்தால்

அதற்கான ஆவணத்துடன் நான் சாட்சியமளித்திருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8, 9 ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் பிரதிவாதிகளுடையது அல்ல என்றால் சரியல்ல. நான் வங்கியில் பணிபுரிவதால் வங்கிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதிகள் உயிர்ப்பு கடிதங்கள் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் வங்கி நிறுவனமே மோசடியாக தயார் செய்துள்ளது என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.